Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 255

சனிக்கிழமை
09 ஓகஸ்ட் 2025

ஆடி 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

**நல்லூர் திருவிழாவில் நகைகள் அவதானம்!**

பொலிஸார் எச்சரிக்கை

விரிவு பக்கம்:- 05

முல்லைத்தீவு - முத்தையன்கட்டு

## இராணுவ முகாமுக்குள் சென்றவரைக் காணோம்

### இராணுவத்துடன் பொதுமக்கள் குழப்பம் இரவிரவாகப் பதற்ற நிலை நீடிப்பு

**முல்லைத்தீவு, ஓகஸ்ட் 9**

**முல்லைத்தீவு - முத்தையன்கட்டு குளப்பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்குச் சென்ற நபரொருவர் காணாமற் போயுள்ள நிலையில், அவருக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறு பொதுமக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.**

11



## நூற்றுக்கும் மேற்பட்ட பனைகள் தீக்கிரை!

கட்டைக்காட்டில் விஷமிகள் கைவரிசை

யாழ்ப்பாணம், ஒக. 9

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டுப் பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட பனைகள் விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

11

## அதிவேகம் விபரீதமானது விபத்தில் இளைஞர் பலி!


யாழ்ப்பாணம், ஒக. 9

அதிவேகமாகப் பயணித்த மோட்டார்சைக்கிள், வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்கு உள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

11

யாழ். பல்கலைக்கழகத்தின்

## சைவ சித்தாந்தத்துறைத் தலைவராக கலாநிதி செல்வமனோகரன் நியமனம்!



யாழ்ப்பாணம், ஒக. 9

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக்கற்கைகள் பீட சைவசித்தாந்தத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி திருச்செல்வம் செல்வமனோகரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறையின் புதிய

11

அரசாங்கத்துக்கு எதிராகச் சதி

## ஜனாதிபதியின் குற்றச்சாட்டு எந்த அடிப்படையும் அற்றது

ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம்

கொழும்பு, ஓகஸ்ட் 9

அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் சதி நடவடிக்கையில் ஈடுபடுகின்றன என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்த கருத்துகள் எந்த அடிப்படையும் அற்ற குற்றச்சாட்டு - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி கண்டித்துள்ளது. ஐக்கிய தேசியக்

11

## சிறுமி துஷ்பிரயோகம்; ஒருவருக்கு மறியல்!

கிளிநொச்சி, ஒக. 9

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் நபரொருவர் விளக்கமறியலில் வைக்கப்

11

## இலங்கைக் கடற்படைக்கு எதிராக கடுமையான நடவடிக்கை தேவை!

பாம்பனில் மீனவர்கள் போராட்டம்!

சென்னை, ஒக. 9

இலங்கைக் கடற்படையால், தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்படுவதைக் கண்டித்து, தமிழகம் பாம்பன் பகுதியில் மீனவர்கள் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இலங்கைக்

11



## சட்டவிரோத விகாரையை உடனடியாக அகற்றுங்கள்

தையிட்டியில் நேற்றும் போர்

யாழ்ப்பாணம், ஒக. 9

தையிட்டி - திஸ்ஸ விகாரையை அகற்றிவிட்டு, அந்தக் காணியை விடுவிக்குமாறு வலியுறுத்தி நேற்றுமுன்தினம் ஆரம்பித்த போராட்டம் நேற்றும் தொடர்ந்தது. ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்துக்கு முதல் நாளும், பௌர்ணமி தினத்

11

புல்லுக்குளத்திலிருந்து

## ஆணொருவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக. 9

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள

11

## கடலுக்குச் சென்று திரும்பிய மீனவர் வெட்டிப் படுகொலை!

கொக்குத்தொடுவாயில் கோரம்



முல்லைத்தீவு, ஒக. 9

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டு விட்டுத் திரும்பிய மீனவரொருவர் நேற்று அதிகாலை வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

கொக்குத்தொடுவாய் வடக்குப் பகுதியைச்

11

'ஆமி இனப்படுகொலை செய்தமாதிரி எங்கட ஆக்கள் பனைப்படுகொலை செய்யினம் கண்டியளோ'

பரவல் இல்லாவிட்டாலும்

## மலேரியா நுளம்புகள் இன்னமும் இலங்கையில்

மருத்துவர் கேதீஸ்வரன் அதிர்ச்சித் தகவல்

யாழ்ப்பாணம், ஒக. 9

இலங்கையில் மலேரியாக் காய்ச்சலின் உள்ளூர்ப் பரவல் கட்டுப்படுத்தப்பட்டாலும், மலேரியா நோயைக் காவக்கூடிய நுளம்புகள் தொடர்ந்தும் காணப்படுகின்றன - இவ்வாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

11

## காய்ச்சல் காரணமாக சிறுமி பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், ஒக. 9

நீண்டநாள் காய்ச்சல் மற்றும் கிருமித் தொற்றுக் காரணமாக, சிறுமி யொருவர் நேற்று உயிரிழந்

11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 08.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4157 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 12 23 39 79 |
| விசேட எழுத்து | G |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 08.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1224 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 08 13 49 58 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 08.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0183 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 4 2 3 4 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 08.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2263 |
| ஆங்கில எழுத்து | K |
| சுப்பர் இலக்கம் | 08 |
| வெற்றி இலக்கங்கள் | 33 35 39 50 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 08.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5915 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 1 2 1 3 7 4 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 08.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1945 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 22 42 50 60 |
| விசேட எழுத்து | N |

**அத சம்பத**

| | |
|---|---|
| திகதி | 08.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0490 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 1 3 7 4 |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 08.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0031 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 10 40 41 50 |

# இளம் தலைமுறைகளிடையே தேய்கின்றது சமூக அக்கறை

*அதனாலேயே காப்பகங்கள் உருவாக்கமென வடக்கு ஆளுநர் கவலை*

**யாழ்ப்பாணம், ஓக.9**



**இன்றைய இளம் பராயத்தினருக்குச் சமூகம் என்றால் என்னவென்று தெரியாத நிலைமைதான் இருக்கின்றது. மற்றையவர்களுக்கு உதவத் தெரியாதவர்களாக அவர்கள் வளர்கின்றார்கள். அதனால் தான் மூத்தோர் காப்பகங்கள் எமது சமூகத்துக்குக்கூட அத்தியாவசியத் தேவையாக மாறிவருகின்றது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார். கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். வடமராட்சி துன்னாலை மத்தியில் புதிதாக அமைக்கப்பட்ட கரவை நல்வாழ்வுக் காப்பகத்தின் திறப்புவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், போரால் உருக்குலைந்த எமது சமூகக்கட்டமைப்பின் காரணமாக முதியோர் நலக் காப்பகங்கள் காலத்தின் தேவையாகவுள்ளன. உயிர்தந்த பெற்றோரைப் பராமரிப்பது பிள்ளைகளின் பொறுப்பாகவுள்ளபோதும் அது இன்றைய சூழலில் சாத்தியம் குறைந்த ஒன்றாக மாறிச்செல்கின்றது. இன்று கணவன், மனைவி இருவரும் பணிக்குச் செல்கின்றார்கள். அவர்களின் பிள்ளைகளைப் பராமரிப்பதற்குப் பெற்றோர் தேவையாக இருக்கின்றனர். பெற்றோர் இயங்குநிலையில் இருக்கும் வரையில் வீட்டில் வைத்திருக்கும் பிள்ளைகள் அவர்களது இயங்குதிறன் குறைந்ததும் வெளியில் விடுகின்றனர். அப்படியான பெற்றோருக்கு இப்படியான காப்பகங்கள் அரணாக அமையும். எங்களை ஆளாக்கிய பெற்றோரை நாங்கள் இலகுவாகப் பராமரிக்க மறந்துவிடுகின்றோம். அதேநேரம், முதியவர்களுக்கு மரியாதை வழங்கத் தெரியாதவர்களாகவும் நாங்கள் மாறி வருகின்றோம்- என்றார். (ச-25,66,113,159)

**சுபிரி தன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 08.08.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0623 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 4 5 1 1 4 3 |

**Super Ball DLB**

| | |
|---|---|
| திகதி | 08.08.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2889 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கம் | 13 47 63 69 |

**சனிதா DLB**

| | |
|---|---|
| திகதி | 08.08.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கம் | 45 63 71 77 |
| வெற்றி வாரம் | 5050 |

**SASIRI DLB**

| | |
|---|---|
| திகதி | 08.08.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0743 |
| வெற்றி இலக்கம் | 26 31 32 |

**லக்ன ராசி DLB**

| | |
|---|---|
| திகதி | 08.08.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| விருச்சிகம் | ♏ |
| வெற்றி இலக்கம் | 27 28 38 56 |
| சீட்டிழுப்பு வாரம் | 4601 |

**KAPRUKA DLB**

| | |
|---|---|
| திகதி | 08.08.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Y |
| சுப்பர் இலக்கம் | 30 |
| வெற்றி இலக்கம் | 15 38 57 72 |
| வெற்றி வாரம் | 2065 |

**அத கோடிபதி DLB**

| | |
|---|---|
| திகதி | 08.08.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 36 40 43 51 |
| வெற்றி வாரம் | 2715 |



# நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதில் அநுர பின்னடிப்பு

*ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு*

கொழும்பு, ஓக.9

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை அநுரகுமார திஸாநாயக்கவும் அனுபவிக்க ஆரம்பித்துள்ளார் போலும். அதனால்தான் அவரது நாடாளுமன்ற உரையில் புதிய அரசமைப்புத் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

புதிய அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்துவதற்காக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம், தேர்தல் முறைமை மாற்றம் உள்ளடங்கலாக புதிய அரசியலமைப்பு விரைவில் இயற்றப்படும் எனத் தேசிய மக்கள் சக்தி உறுதியளித்திருந்தது. ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் நேற்று (நேற்றுமுன்தினம்) ஒன்றரை மணிநேரம் உரையாற்றினார். எனினும், புதிய அரசமைப்புத் தொடர்பாக அவர் வாய் திறக்கவில்லை. எனவே, புதிய அரசமைப்புக்குரிய சட்டவரைவைத் தயாரிப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை அமைக்கவேண்டும் என்று யோசனை முன்வைக்கப்படவுள்ளது. இது தொடர்பில் எமது கட்சி முடிவெடுத்துள்ளது- என்றார். (எ-44)

# வட்டிவீதம் சரிவு வைப்புத்தொகை உயர்வு

கொழும்பு, ஓக.9

சந்தை வட்டி விகிதங்களின் சரிவுக்கு ஏற்ப வைப்புத்தொகைகளுக்கான வட்டி விகிதங்கள் சரிந்துள்ளன. எனினும் வங்கித் துறையில் வாடிக்கையாளர் வைப்புத்தொகை 2024 முதல் 2025ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டு வரை வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி 2025 மார்ச் வரையிலான முதல் காலாண்டில் வைப்பு 559.2 பில்லியன் ரூபாவாக அதிகரித்து 12,883 பில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது. 2025ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் இந்தத் தொகை 351.3 பில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது. (ச-இ)

# ம.உரிமைகள் பணியகத்தின் இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஓக.9

சர்வதேச மனித உரிமைகள் பணியகத்தின் ஏற்பாட்டில், மாபெரும் இலவசமருத்துவ முகாம் யாழ்.கதீஜா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். மருத்துவர் கே.கோபிகிருஸ்ணன் பரிசோதனைகளை மேற்கொள்ளவார். தொற்று, தொற்றா நோய்கள், இரத்தப் பரிசோதனை, உயர் இரத்த அழுத்தம், கண் பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை போன்றவை மேற்கொள்ளப்படுவதோடு ஆலோசனைகளும் வழங்கப்படும். மேலதிக தகவல்களுக்கு 0776938047, 0773206555 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

# சஜித் இருக்கும் வரையில் திசைகாட்டி அரசாங்கமே

*சுனில் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.9

சஜித் பிரேமதாஸ எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்வரையில் திசைகாட்டியிடமே அரசாங்கம் இருக்கும் என்று மக்கள் கூறுகின்றனர் என கைத்தொழில் மற்றும் நிறுவன மேம்பாட்டு அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, கார்ட்டூன் திரைக் கதையில் வரும் செள செள போன்றவர். எல்லாவற்றையும் வேண்டாம் என்று சொல்வதுதான் அந்த கதாப்பாத்திரத்தின் தன்மை. அதனால்தான் சஜித் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்வரை, திசைகாட்டி அரசாங்கமே இருக்கும் என்று மக்கள் கூறுகிறார்கள். நாடு முழுவதும் பல தொழிற்றுறை விடயங்களை நாங்கள் ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம். 19 புதிய தொழிற்றுறை விடயங்களை நாங்கள் ஆரம்பிக்கவுள்ளோம். இவை ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலங்காரக் கந்தன் திருமஞ்சத்தில் பவனி





'அலங்காரக் கந்தன்' எனப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்.நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் பத்தாம் திருவிழாவான திருமஞ்சத் திருவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் மிகவும் சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் நடைபெற்றது. (ச-66)

# தெய்வீகக்கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக.9

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தும் "தெய்வீகக் கலை அர்ச்சனை" நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 10மணிக்கு இடம்பெறவுள்ள்து. இதன் போது மட்டுவில் ஓம் நமச்சிவாயக் குழுவினரின் பஜனை நிகழ்வும்; சைவப்புலவர் செ. த. குமரனின் ஆன்மிகவுரையும் இடம்பெறவுள்ளன. (ச-41)

# நல்லூர்க்கந்தன் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.9

கு.சண்முகநாதனின் 'ஈழநல்லூர்க் கந்தசுவாமி கோயில்' வரலாற்றுண்மையும் ஞானப்பொருள் விளக்கமும் நூல் வெளியீட்டு விழா நல்லை ஆதீனத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

வெளியீட்டுரையை சைவவித்தியா விருத்திச் சங்கத் தலைவர் சோ.பத்மநாதன், வாழ்த்துரையை இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அநிருத்தனன், ஏற்புரையை கு.சண்முகநாதன் ஆகியோர் வழங்குவர். (ச-25)

## தெய்வீகத் திருக்கூட்டத் தொடர்


யாழ்ப்பாணம், ஓக.9

நல்லூர்ப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் பன்னிரண்டாம் நாள் நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக்கலா மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

வேதாந்த மடம், ஸ்ரீ சிவகுருநாதபீட 8ஆவது குருபீடாதிபதி ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் முன்னிலை வகிக்க, யா/சுழிபுரம் விக்டோரியா கல்லூரி ஓய்வுநிலை அதிபர், பிரம்மஸ்ரீ வரத்ராஜக் குருக்கள் ஸ்ரீகாந்தசர்மா தலைமையில் இந்தத் திருக்கூட்ட நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கலைநிகழ்வுகளை யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பிரிவின் அத்தியடி சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, செந்தில் கதிர்வேலாயுத சுவாமி அறநெறிப்பாடசாலை மற்றும் வெங்கடேசன் அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் வழங்கவுள்ளனர். சிறப்பு நிகழ்வுகளாக இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள வளவாளர் நாகராஜா சனாதனனின் "சைவத்தமிழ் தமிழர்கள்"என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவும், நல்லூர் ஸ்கந்தபதி கலாமன்ற நிறுவுநர் மற்றும் இயக்குநர் கலாவித்தகர் திருமதி. மா. அனந்தலட்சுமியும் அவரது மாணவர்களும் வழங்கும் "இசை அர்ப்பணம்" நிகழ்வும், மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ச-41)

நீர்வேலி வாய்க் கால்தரவை விநாயகர் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்று வெள்ளிக் கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-41-17)



# ஆன்மிக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக.9

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தில் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் ஆன்மிக அருளுரை இன்று சனிக்கிழமை இரவு 8 மணி முதல் இரவு 8.30 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்துகொண்டு "அறியாமையினால் கெடவோ!" எனும் தலைப்பில் ஆன்மிக அருளுரை ஆற்றுவார். (ச-41-66,100)

## 12 ஆம் திருவிழா




## ஆதி சிவனின் இளைய மைந்தனே!

புலமையினால் ஆணவம் பெற்றிருந்த
ஔவைக்குச் சுட்டபழம் கொடுத்து
ஆணவத்தை அடக்கிய ஆதி சிவனின்
இளைய மைந்தனே!

உலக வாழ்வையே வெறுத்து
உயிரை முடிக்க முனைந்த
அருணகிரியை ஆட்கொண்டு
திருப்புகழ் பாட அடியெடுத்துக்
கொடுத்த அற்புதனே!!
தமிழ் அழகனே!!!

யாழ்ப்பாணம் தொண்டமான் ஆற்றங்கரையில்
பூவரசமரத்தடியானாக இருந்த
பெரியவர் கதிர்காமரை இரட்சித்துப்
பெரும் புரட்சி செய்த தயாள சீலனே! இன்று
துகிலுரியப்பட்ட திரௌபதியைப் போல்
அவமானப்பட்டுக்கொண்டிருக்கும் தமிழினத்துக்கு
அபயக்கரம் அளிப்பது தொடர்பில்
ஏன் மௌனம் காப்பு?

**வீரப்பதி விநோதன்**
தென்கருனை, கரவெட்டி

## மனமது உருகிட குகனருள் பெருகுமே

**எடுப்பு**
எழிலுறு முருகனின் கழலடி நிதநிதம்
தொழுதிட வினை கெடுமே - நெற்றி(க்)
கனலிடை உதித்தவன் நினைவினில் நிலைப்பவர்
மனையது செழித்திடுமே தினமே
(எழிலுறு)

**தொடுப்பு**
அறமிகு நல்லையில் இறைமையின் நாயகன்
நிறையருள் பெருகிடுமே - மனம்
பரம்பொருள் அம்பிகை கரங்களில் தவழ்ந்தவன்
வரம்பெற உருகிடுமே மனமே
(எழிலுறு)

**முடிப்பு I**
தமிழென்னும் நிகரிலா அமுதுறை சுவையினில்
தமைமறந் துறைபவனே - தமிழ்க்
குலமது தழைத்திட நலங்களில் குளித்திட
நிலமிசை நிறைபவனே குகனே
(எழிலுறு)

**முடிப்பு II**
தேவடியாரெல்லாம் காவடி சுமந்தவன்
பூவடிதனில் விழுவார் - மெய்
அடியவர் வாழ்வினில் நெடிதுயர் துன்பம்
பொடிபட அவர் எழுவார் நலமே
(எழிலுறு)

**முடிப்பு III**
செம்மணிப் புதைகுழி நம்மவர் பெருந்துயர்
தம்மினுக் கொரு சாட்சி - இந்த
வையகம் உதவிட செய்தவர் அழிவுற
ஐயனின் அருட்காட்சி நமது
(எழிலுறு)

**ஆனையூர்க்கவிராயர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும். உடல் நலனில் கவனம் தேவை. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு ஒன்றை துணிந்து எடுப்பீர்கள். அது சாதகமாகவே முடியும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்

**கடகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் சாதகமாக முடிந்துவிடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி ஏற்படும்.

**கன்னி:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்குப் பணியின் காரணமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடுவதுடன் அதனால் ஆதாயமும் உண்டாகும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்களுக்குத் தேவையில்லாத விஷயங்களில் தலையிடவேண்டாம். பொறுமை காப்பது அவசியம்.

**விருச்சிகம்** : எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. உறவினர்கள் வருகையால் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.

**தனுசு:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். உறவினர்களிடம் பேசும் போது நிதானம் அவசியம். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், அவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** உற்சாகமான நாளாக இருக்கும். திடீர் பொருள்வரவு மகிழ்ச்சி தரும். எதிர்பார்த்த காரியம் சற்று தாமதமாகத்தான் முடியும். புதிய முயற்சிகளைக் காலையிலேயே தொடங்குவது நல்லது.

**கும்பம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**மீனம்:** மனதில் இனந்தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பயணங்களைத் தவிர்க்கவும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.




# சி.கதிர்காமநாதனின் 3 நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.9

சி.கதிர்காமநாதனின் "சிரிகதைகள்", "வலையில் படும் வெளவால்கள்", "தா" ஆகிய 3 சிறுகதை நூல்களின் வெளியீட்டு விழா பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் த.ஜெயசீலன் தலைமையில் சுழிபுரம் வழக்கம்பரை, வலி. மேற்கு பிரதேசசபை மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்த நூல்கள் பற்றி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆசிரியர் ந.குகபரன், யாழ்.பல்கலைக்கழக வணிகபீட, முகாமைத்துவக் கற்கைநெறிகள் துறைத்தலைவர் பேராசிரியர் திருமதி சிவாணி சண்முகதாஸ், யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறை முதுநிலை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் ஆகியோர் நயப்புரையாற்றுவர். ஆர்வலர்கள் அனைவரையும் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. (ச-25)

# கலைச் சங்கமம்

யாழ்ப்பாணம், ஓக.9

வட மாகாண கல்விப்பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில், பாரம்பரிய 'கலைச் சங்கமம்' நிகழ்வு வட மாகாண பண்பாட்டலுவல்கள் அலகு பிரதிப் பணிப்பாளர் திருமதி லா.நிருபராஜ் தலைமையில் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பாகிய நிலையில் எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை வரை தினமும் மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி மாலினி கிருஸ்னானந்தன் தலைமையில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் அமைச்சின் உதவிச் செயலாளர் சு.சுபாஸ்கரனும் மன்னார் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் அமைச்சின் கணக்காளர் திருமதி ர.வளர்மதியும் யாழ். சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சுகுனாளினி விஜயரட்ணம் தலைமையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் த.அகிலனும், பண்பாட்டு அலுவல்கள் அலகு கலாசார உத்தியோகத்தர் மா.அருள்சந்திரன் தலைமையில் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் அமைச்சின் பிரதம கணக்காளர் வே.கலைச்செல்வனும் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25,159)

# கூட்டம் பிற்போடல்

சாவகச்சேரி, ஓக. 9

எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவிருந்த தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. கூட்டம் இடம்பெறும் புதிய திகதி மற்றும் நேரம் பின்னர் அறியத் தரப்படும் எனப் பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,9)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஓக. 9

நாகர்கோவில் வடக்கு அருள்மிகு முருகையா தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை மாம்பழ உற்சவமும், 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தெப்ப உற்சவமும், 16ஆம் திகதி சனிக்கிழமை மஞ்ச உற்சவமும், 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூங்காவன உற்சவமும், 18ஆம் திகதி திங்கட்கிழமை வசந்தோற்சவமும், 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருமண உற்சவமும், 20ஆம் திகதி புதன்கிழமை வேட்டை உற்சவமும், 21 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பற உற்சவமும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும், 23ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெற்று மாலை கொடி இறக்கமும் இடம்பெறவுள்ளது. (ச-100)



# இலவச யோகா வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஓக.9

உலக சமாதான ஆலயத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படவுள்ள இலவச யோகா பயிற்சி வகுப்புகள் யா/இணுவில் இந்துக் கல்லூரியில் இன்று சனிக்கிழமை மாலை 4மணி முதல் ஆரம்பமாகித் தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் நடைபெறவுள்ளன.

சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 4மணிக்கு நடைபெறும் வகுப்புகளில் கலந்துகொள்பவர்களுக்கு மூன்று மாதப் பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும்.

இந்தப் பயிற்சி வகுப்பில் ஆண், பெண் இருபாலரும் கலந்துகொள்ளலாம். கலந்துகொள்ள விரும்புபவர்கள் 077 047 6398 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக.9

சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டுச் சிறப்புச்சொற்பொழிவு எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் மாலை 6.30மணிக்குச் சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

இதன்போது சைவப்புலவர்கள் செ.த.குமரன், ச.முகுந்தன், க.கைலநாதன், பொன். சந்திரவேல் மற்றும் இளஞ்சைவப்புலவர்கள் க. கயிலைவாசன், ச. நவநீதன், நித்திய பாபுதரன், த. தமோஜ்குமார் ஆகியோரின் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப்புதைகுழி விடயத்தில் சட்டக் கட்டமைப்புத் தேவை!

*மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்து*

கொழும்பு, ஓக.9

**மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் சுயாதீனமானதும், பக்கச்சார்பற்றதும், பாதிக்கப்பட்ட தரப்பை மையப்படுத்தியதுமான செயன்முறைக்குத் துணையளிக்கக்கூடிய சட்ட மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளவேண்டும் என்று நீதியமைச்சரிடம் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்தியுள்ளது.**

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மனிதப்புதைகுழி விவகாரத்தில் தடயவியல் ஆய்வு உள்ளடங்கலாக அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பாராட்டும் அதேவேளை, இவ்விடயத்தில் உண்மையைக் கண்டறிவதற்கும், நீதியைப் பெற்றுக்கொள்வதற்கும் உரியவாறான நிபுணத்துவம் மற்றும் வளங்கள் என்பன உடனடியாகத் தேவைப்படுகின்றன.

மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் சுயாதீனமானதும், பக்கச்சார்பற்றதும், பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்தியதுமான செயன்முறைக்குத் துணையளிக்கக்கூடிய சட்ட மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளை மேற்கொள்ளவேண்டும் என்றும், அவற்றின் இயலுமையை வலுப்படுத்தவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## நல்லூர்த் திருவிழா; நகைகள் அவதானம்

யாழ்ப்பாணம், ஓக.9

நல்லூர்ஆலயச்சூழலில்திருடர்களின் நடமாட்டம் காணப்படுவதால் ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்கள் அவதானமாக இருக்குமாறு யாழ்ப்பாணப் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். ஆலயத்துக்கு தங்கநகைகளை அணிந்து வருவதைத் தவிர்க்குமாறும், அணிந்துள்ள தங்கநகைகளில் கவனம் செலுத்துமாறும் பொலிஸார் கோரியுள்ளனர்.

அத்துடன், பொலிஸ் சீருடை மற்றும் சிவில் உடைகளில் பொலிஸார் ஆலயச் சூழல்களில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அருகில் உள்ளவர்கள் தொடர்பில் சந்தேகங்கள் எழுந்தால், பொலிஸாருக்கு உடன் அறிவிக்கலாம்.

அதேவேளை ஆலயச் சூழல்களில் கண்காணிப்புக் கமராகள் பொருத்தப்பட்டு, அனைவரும் கண்காணிக்கப்படுகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-20,28,66)

## நல்லூர் ஆலயம் நோக்கி நீண்ட பாதயாத்திரை

வவுனியா, ஓக.9

வவுனியா - வேப்பங்குளம் அருள்மிகு முத்துமாரி அம்பாள் திருக்கோவிலின் நல்லைக்கந்தன் திருத்தலத்துக்கான வேல் தாங்கிய நடைபாதயாத்திரை எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பாதயாத்திரை வவுனியா - மன்னார் வீதி வழியாக வவுனியா நகரை அடைந்து, 15,16,17,18,19,20 ஆம் திகதிகளில் ஏ-9 பிரதான வீதியூடாக அருகாமையில் உள்ள ஆலயங்களைத் தரிசித்தவாறு நல்லூர் ஆலயத்தை அடையவுள்ளது. யாத்திரையில் இணைய விரும்புவோர் 0776143628, 0764077129 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு ஆலய நிர்வாகி கு.ஜெயராணி அறிவித்துள்ளார். (ச-25)




## உ/தரப் பரீட்சை விண்ணப்பிக்கும் காலம் நீடிப்பு

கொழும்பு, ஓக.9

2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித்திகதி ஓகஸ்ட் 12ஆம் திகதி நள்ளிரவு வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி ஓகஸ்ட் 7ஆம் திகதி ஒன்லைனில் வெளியிடப்பட்ட 2024ஆம் ஆண்டுக்கான மறுமதிப்பீட்டு முடிவுகளால் பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு இந்த நீடிப்பு பொருந்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## வெள்ளி, ஞாயிறுகளில் வகுப்புகளை நடத்தாதீர்

யாழ்ப்பாணம், ஓக.9

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை மாலை மற்றும் ஞாயிற்றுக்கிழமை காலைவேளைகளில் தரம் 9க்கு உட்பட்ட மாணவர்களுக்குத் தனியார் மற்றும் குழு நிலை வகுப்புகள் நடத்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மாணவரின் உடல், உள, சமூக, ஆன்மிக நல்வாழ்வைக் கருத்திற்கொண்டு யாழ்.மாவட்டச்செயலரால் எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானத்தை மீறி வகுப்புகள் நடத்தப்படுவது தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

தங்களிடம் இதுதொடர்பான தகவல்கள் இருப்பின் பிரதேச பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அலுவலகத்தில் கிழமை நாள்களில் பி.ப.2 மணி முதல் 3 மணி வரையான நேர காலப் பகுதியில் முறைப்பாடுகளைச் செய்யமுடியும் என்றும் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவக் கலாநிதி ப.நந்தகுமார் தெரிவித்துள்ளார். (ச-25,66)




## தண்ணீரப்பந்தல் விலாசங்கள்

புண்ணியம் செய்யிறமெண்டதுக்காக ஆரும் புழுதியை வாரியிறைக்க ஏலாது. ஆனால் இஞ்ச எல்லாமே அப்பிடித்தான் நடக்குது. எல்லாருக்கும் தங்கட விலாசத்தைக் காட்டுறதுக்காக ஏதும் எழுப்பமாச் செய்தாலும், அந்தக் காரியத்தைச் சரியாச் செய்யோணுமெண்டோ இல்லாட்டி அதால வாற பின்விளைவுகளைப் பற்றியோ கொஞ்சமும் யோசிக்கிறேலை.

இப்ப எல்லா இடமும் கோயில் திருவிழாக்கள் தொடங்கிட்டுது. ஓகஸ்ட் வந்தாலே வெளிநாட்டுக்காரரும் இஞ்ச வந்திடுவினம். அதுக்கு ரண்டு காரணம் இருக்கு. ஓகஸ்ட்டிலதான் வெளிநாடுகளில கனபேருக்கு லீவு எடுக்கலாம். மற்றது, ஓகஸ்ட்டிலதான் ஊர்க்கோயில்களில திருவிழாக்கள் நடக்கும், அதுக்கு வந்து நடப்புக்காட்டலாம். அப்பிடி வாற வெளிநாட்டுக்காரர் காசைக் காசெண்டு பார்க்காமல் விசுக்கித் தள்ளுவினம். அதுவரைக்கும் கோயிலில ஆரும் செய்யாத ஏதாவது ஒண்டைச் செய்து, அடுத்த திருவிழா மட்டும் ஊர்ச்சனம் அதைப்பற்றி பேசோணும் எண்டு நினைப்பினம். இது ஊர்க்கோயில்களில மட்டுமில்லை, ரவுணை அண்டியுள்ள பெரிய கோயில்களை வைச்சும், இப்பிடி ஏதும் விளையாட்டுக் காட்டாட்டி அவைக்குப் பத்தியப் படாது. ஆனால் இவையின்ர விலாசம் காட்டுற விளையாட்டுகளால வாற வில்லங்கங்கள் பற்றி அவையள் கொஞ்சமும் கூச்சநாச்சப்படுறேல்லை எண்டதுதான் பெரும் வேதனை.

முந்தநாள் பின்னேரம் யாழ்ப்பாணம் ரவுனுக்கு கிட்டவா இருக்கிற சந்தியொண்டில கடும் சனக்கூட்டம். அதால போய்வாற வாகனங்களும் அதில போய்க் குழுமி நிக்க, அந்த றோட்டே அடைபட்டுப் போட்டுது. சந்திக்கு அங்காலையும் போகேலாமல், இஞ்சாலையும் வரமுடியாமல் சனங்கள் அல்லாடிக்கொண்டிருந்ததுகள். ஏன் இப்பிடித் திடீரெண்டு சனக்கூட்டம் எண்டு பார்த்தால், அந்தச் சந்தியில உள்ள தண்ணீர்ப்பந்தலில 'பேப்பர் கப்'பில எல்லாருக்கும் பால் தேத்தண்ணி குடுத்துக்கொண்டிருந்தினம். கோயிலுக்குப் போய்வாறவைக்கு பின்னேரத்தில தேத்தண்ணி குடுக்கிறது புண்ணியம் தான், அதுக்காக ஆமிக்காரர் முந்திச் செக்பொயின்ரில மறிச்சமாதிரி போய்வாற ஆக்களையும், வாகனங்களையும் மறிச்சுவைச்சு தேத்தண்ணியைக் குடிக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்திறதுதான் பிழை. இவையள் பெரிசாக் கட்டாயப்படுத்தாட்டியும், ஆக்களையும் வாகனங்களையும் மறிக்கேக்க, பின்னால வந்தவை போகவழியில்லாமல் அப்பிடியே நிக்க அந்த றோட்டே அடைபட்டமாதிரிப் போடுமெண்டதை அவையள் யோசிக்கேல்லையோ? அதைவிட இன்னொரு விசயமும் இருக்கு. இப்பிடி அவையள் குடுத்த தேத்தண்ணியை அந்த இடத்திலே நிண்டுகொண்டு குடிச்சவை, போற வாகனத்தில இருந்தபடி குடிச்சவை எல்லாரும் 'பேப்பர்க்கப்'பை அந்தந்த இடங்களிலயே எறிஞ்சுபோட்டு போட்டினம். தண்ணீர்ப் பந்தலடியிலகூட 'பேப்பர்க்கப்'பைப் போட ஒரு குப்பைத் தொட்டி கூட இல்லை. அதால தேத்தண்ணி குடுத்த இடத்தில இருந்து ஒண்டரைக் கட்டைக்கு அங்காலையும் றோட்டுக்கரை முழுக்க ஒரே 'பேப்பர்க்கப்' மயம்தான். சனத்துக்கு தேத்தண்ணி குடுக்கோணும் எண்டு நினைச்சவை, கொஞ்சம் இதுகளையும் கவனிச்சிருக்கலாமெல்லோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊறணி இந்துமயானத்துக்கு அபிவிருத்திக்குழு தெரிவு

யாழ்ப்பாணம், ஓக.9

வல்வெட்டித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட ஊறணி இந்துமயானத்துக்கான அபிவிருத்திக்குழு தெரிவுசெய்தலும் கலந்துரையாடலும் தவிசாளர் சுரேந்திரநாதன் தவமலர் தலைமையில் வல்வெட்டித்துறை நகர சபை பொதுநூலக மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.


கலந்துரையாடலில் நகரசபையின் செயலாளர், நகர சபையின் கௌரவ உறுப்பினர்கள், நகரசபையின் உத்தியோகத்தர்கள், கிராமசேவையாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(ச-41-100)


## அந்தியேட்டிக்கிரியை அழைப்பு

தோற்றம் 25 . 09 . 1932

மறைவு 13 . 07 . 2025



### அமரர் திருமதி சுப்பையா பரமேஸ்வரி

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் அஸ்திக் கரைப்பு எதிர்வரும் 10.08.2025 ஞாயிறு காலையில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியம் 12.08.2025 செவ்வாய் அன்று தற்போதைய இருப்பிடமான இல 201/83, 6ம் ஒழுங்கை, கோவில் புதுக்குளம், வவுனியா முகவரி இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து மதிய உபசரனையும் நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

சுப்பையா சிவனொளிபாதம் (மகன்)

குடும்பத்தினர்


# வேலணையில் நவீன வசதியுடன் பொது விளையாட்டுமைதானம்!

## பல்துறைசார் அதிகாரிகள் ஆய்வு

வேலணைப் பிரதேசத்துக்கான நவீன வசதிகளுடன்கூடிய பொதுவிளையாட்டு மைதானம் ஒன்றை அமைப்பதற்கான அமைவிடத்தை வேலணை - அராலிச் சந்திப் பகுதியில் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ள நிலையில், குறித்த அமைவிடத்திற்கு துறைசார் அதிகாரிகள் நேரில் சென்று கள ஆய்வுகளை மேற்கொண்டனர்.


வேலணைப் பிரதேசசபையின் கோரிக்கையை ஏற்று வேலணைப் பிரதேசசபையின் தவிசாளர், வேலணைப் பிரதேசசபையின் செயலாளர் ஆகியோருடன் வேலணைப் பிரதேச செயலக அதிகாரிகள், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், காணி அதிகாரி மற்றும் துறைசார் அதிகாரிகள் ஒன்றிணைந்து இந்தக் கள ஆய்வை மேற்கொண்டனர்.

இதேவேளை வேலணைப் பிரதேசத்தின் விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் தொடர் நடவடிக்கையாக பொது மைதானம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கை வேலணைப் பிரதேசசபையால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ச-27)


## மரண அறிவித்தல்

### வேலாயுதபிள்ளை சூரியகுமார்



தோற்றம் 03.03.1957

மறைவு 07.08.2025

கொக்குவில் கிழக்கு, கல்லூரி வீதியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை சூரியகுமாரன் கடந்த (07.08.2025) வியாழக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.)

செல்வாவேல்
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்

தகவல்:
வே.ஸ்ரீபாலன்

(CS 59003) E



## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 11 . 06 . 1953

ஆண்டவன் அடியில் 03 . 08 . 2020



### அமரர் மலர்தேவி அருணாசலம்

(ஓய்வு பெற்ற விஞ்ஞான ஆசிரியர்
யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்)

திதி : 09.08.2025

அம்மா..!
உன் குரல் ஒன்றே
இவ் உலகில் - நம்மை
ஆற்றக் கூடியது..!
நீ இல்லாப் பொழுதுகளிலும் கூட
உன் குரல் - நம் காதோரம்
கதை பேசிக்கொண்டே இருக்கிறது ..!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"பூம்புகார்"
திருவீதி,
உரும்பராய் வடக்கு.

கணவர்
பிள்ளைகள் : சிறோமி, சியாமளி, சுவேதினா மற்றும் மருமக்கள்
077 6396 851

(CS 59054) A



## UNIVERSITY OF JAFFNA
## FACULTY OF AGRICULTURE
## ADMISSION OF PUBLIC OFFICERS

### FOR DEGREE PROGRAMME IN B.SC. HONOURS IN AGRICULTURE (2023/2024)

Applications will be entertained by the Office of the Dean, Faculty of Agriculture University of Jaffna for the Admission of Public Officers for Degree Programme to follow B.Sc.Honours in (Agriculture) as internal students for the Academic Year 2023/2024

1. The applicant should have passed the A/L Examination in Biological Science and qualified to enter the University.

   OR

   Any other qualification, as may be approved by the Faculty Board and the Senate.

   AND

2. Diploma in Agriculture (Course duration not less than 2 years) obtained from any recognized institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officer Grade in the field of Agriculture after obtaining Diploma Course.

**Age:** Candidate should be less than 45 years of age at the time of closing date of applications.

Applications forms and other details will be available in the **website: https://www.jfn.ac.lk/** and **www.agri.jfn.ac.lk.** Downloaded application forms should accompany with the paid bank slip for deposit of a sum of Rs 100/= credited to the **Peoples' Bank Reference No: 010000150001681** of Bursar, University of Jaffna.

**Closing date:** Applications should reach us **on or before: 25.08.2024**

Duly completed application forms along with payment receipt and relevant documents should be sent through the relevant Heads of Department to Assistant Registrar, Faculty of Agriculture, University of Jaffna, Ariviyalnagar, Kilinochchi by registered post and indicate **"Application for Admission of Public Officers for Degree programme B.SC Honours in Agriculture – 2023/2024"** at the top left-hand corner of the envelop.

Applicant may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for written test and an oral examination, if the application channeled through the Head of the Department is not received. Illegible and incomplete applications and applications received after the closing date will be rejected without intimation.

Eligible candidates will be invited to attend for a Written Test and an Oral Examination.

**REGISTRAR**
**09.08.2025**

(CR 45747) E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## மன்னார் எனும் சபிக்கப்பட்ட பூமி!

மன்னார் கடந்த ஒரு வாரமாகக் களேபர பூமியாக மாறியிருக்கின்றது. இரண்டாம் கட்டமாக மேலும் சில காற்றாலைகளை அமைப்பதற்காக, கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பிரமாண்டமான வாகனங்களில் உபகரணங்கள் எடுத்துவரப்பட்ட நிலையில், அந்த வாகனங்களை இடைமறித்து மூன்று நாள்களாக மக்கள் தொடர்ச்சியாகப் போராடியிருந்தனர். இதனால், வீதியில் தரித்திருந்த வாகனங்கள், பின்னர் நூற்றுக்கணக்கான பொலிஸாரும், கலக மடக்கும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு 'பத்திரமாக' மன்னாருக்குள் அனுமதிக்கப்பட்டிருந்தன. இதைத் தொடர்ந்து, மன்னாரில் மக்கள் போராட்டம் மேலும் வேகம் பெற்றிருக்கின்றது.

காற்றாலைகளை அமைப்பதற்காகக் கொண்டுவந்த உபகரணங்களைத் திரும்ப எடுத்துச் செல்லுமாறு ஒரு சாராரும், இல்மனைட் உள்ளிட்ட கனிமங்களை அகழ்வதற்கு அனுமதிக்க முடியாது என்று இன்னொரு தரப்பினரும், இணைந்த வடக்கு கிழக்கில், சமஷ்டியே தீர்வு என வேறுசிலரும் என மன்னாரில் திரும்பும் திசையெல்லாம் போராட்டங்கள்தான். ஆனால், இந்தப் போராட்டங்களை அரசாங்கம் கண்டுகொண்டதாக இல்லை. வடக்கில் உள்ள அரச நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சரும் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றனரே தவிர, அவர்கள் மக்களின் குரலைப் பிரதிபலிக்கும் நகர்வெதையும் மேற்கொண்டதாகத் தகவல் இல்லை.

ஜனாதிபதித் தேர்தலின்போதும், அதன்பின்னர் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போதும் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மன்னாருக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். 'மக்களின் விருப்பம் இல்லாமல் எந்தவொரு திட்டமும் மன்னாரில் நடைமுறைப்படுத்தப்படாது' என்ற வாக்குறுதியை அவர் அழுத்தம் திருத்தமாக வழங்கியிருந்தார். இன்று காற்றாலை வேண்டாம், கனியமணல் அகழ்வு வேண்டாம் என மக்கள் போராடிக்கொண்டிருக்கின்றனர். அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், சிவில் அமைப்பினர்கள் எனப்போராட்டம் நாள்தோறும் விரிவாகிச் செல்கின்றது. ஆனால், ஜனாதிபதியின் வாக்குறுதிகளோ 'நீர்மேல் எழுத்தாக' மாறியுள்ளன. திஸ்ஸ விகாரைக்குத் தீர்வு காணப்படும், உயர்வலயக் காணிகள் விடுவிக்கப்படும், படைமுகாம்கள் அகற்றப்படும், அரசியற் கைதிகளின் விடுதலைக்கு வழிகள் ஏற்படும் என்று ஜனாதிபதியும், தேசிய மக்கள் சக்தியினரும் வடக்கு மாகாணத்தில் வழங்கிய வாக்குறுதிகள் ஏராளம். அதன் தொடர்ச்சியான ஏமாற்றமே மன்னார் மக்களின் போராட்டமுமாகும்.

நிற்க,


யாழ்ப்பாணத்தில் சாதாரணமாக ஒரு போராட்டம் இடம்பெற்றால், அதன்மீது பாய்ச்சப்படும் ஊடக வெளிச்சம் பெரியது. சமூக ஊடகங்களும் அவ்வாறுதான். ஆனால், இந்த விடயத்தில் மன்னார் சபிக்கப்பட்ட பூமியாக மாறியுள்ளது. கடந்த ஒரு வாரமாக இடம்பெறும் இந்தப் போராட்டங்களை நாமும் எமது அரசியற் பிரதிநிதிகளும் கண்டுகொண்டதாயில்லை. எமது குரலை நாங்கள் வலுப்படுத்தினால்தான் அது, அரசாங்கத்தின் காதுகளுக்கு எட்டும். ஓர் அழுத்தத்தையும் வழங்கும். போராட்டங்களின் கனதி, முன்வைக்கப்படும் கோரிக்கைகளைப் பொறுத்தவையே அன்றி, இடம்பெறும் இடங்களைப் பொறுத்தவை அல்ல. இதனை அரசு உணரவேண்டும்.



### நாளொரு நல்வார்த்தை

தடைகள் உங்களை நிறுத்திவிடாது,
நீங்கள் அதனுள் புகுந்து செயற்படும்போது...!

– மைக்கேல் ஜோர்டன் –



# மாகாணத் தேர்தல்களை முடிந்தால் நடத்துங்கள்

## பெரமுனக் கட்சி சவால்



**கொழும்பு, ஒக.9**

**முடிந்தால் மாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி சவால் விடுத்துள்ளது.**

இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட அந்தக் கட்சியின் உறுப்பினர் ஜானக வம்குப்புர தெரிவித்துள்ளதாவது:-

உள்ளூராட்சிசபைத் தேர்தல் முடிந்துவிட்டது. எனினும், மாகாணசபைத் தேர்தல் இன்னும் நடத்தப்படவில்லை. அது நடத்தப்படவேண்டும். அரசாங்கத்தக்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் உள்ளது. அதனால் அதற்குரிய ஏற்பாடுகளை செய்யமுடியும்.

எதிரணிகள் ஒன்றிணைந்து கோரினால் தேர்தலை வழங்கத் தயார் என அரசதரப்பில் கூறப்பட்டது. ஒன்றாக அல்ல தனித்து போட்டியிடுவதற்குகூட நாம் தயார். முடிந்தால் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுக்கின்றோம். அரசாங்கம் கூறுவதை நம்புவதற்கு மக்கள் தயாரில்லை என்பது தேர்தல்மூலம் நிரூபணமாகும் - என்றார். (எ-44)

## பொரளையில் துப்பாக்கிச்சூடு; இருவர் பலி

கொழும்பு, ஓக.9

பொரளையில் சஹஸ்புரவில் உள்ள சிறிசர உயன தொடர்மாடி குடியிருப்பில் அடையாளந் தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வருகைதந்த இருவர் ரி-56 ரக துப்பாக்கியைப் பயன்படுத்தி பின்னர் தப்பிச்சென்றுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த மேலும் இருவர் கவலைக்கிடமாகவுள்ளனர் என மருத்துவமனை வட்டாரம் தெரிவித்துள்ளது. (ச-இ)



## உ/தபரீட்சை மீள்மதிப்பீடு பெறுபேறு வெளியீடு

கொழும்பு, ஓக.9

2024ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையின் மீள்மதிப்பீட்டு பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வெளியிடப்பட்டுள்ளன.

www.doenets.lk, www.results.exams.gov.lk எனும் அதிகாரப்பூர்வ இணையதளங்களில் பெறுபேறுகளைப் பார்வையிடலாம் எனப் பரீட்சைகள் ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச-இ)

## குடும்பத் தகராறில் மனைவி கொலை

கொழும்பு, ஓக.9

அரலகங்வில, தியபெதும சந்திப் பகுதியில் குடும்பத் தகராறின் காரணமாக கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண்ணொருவர் கொலைசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பெண்ணின் கணவர் என அடையாளம் காணப்பட்ட 48 வயதான சந்தேகநபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## விசேட சோதனை 838 பேர் கைது



கொழும்பு, ஓக.9

நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பாக 838 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் குற்றங்களில் நேரடியாக ஈடுபட்ட 20 பேரும் பிடியாணை அடிப்படையில் 675 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

**நாளை** ஞாயிற்றுக்கிழமை - ஆடி 25

10.08.2025

சுபநேரம் : 03.04 - 04.31

ராகுகாலம் : 04.04 - 10.34


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையினர் பிரச்சினைக்கு நாடாளுமன்றத்தில் தீர்வு இல்லை!

பதியுதீன் எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 9**

**நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்ட சிறுபான்மைச் சமூகங்களின் எந்தவொரு பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டதாக வரலாறுகள் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறுபான்மைச் சமூகங்களின் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துத் தீர்வுகாண முடியாது. எந்த அரசாங்கமானாலும் எமது சமூகங்களின் பிரச்சினைகளைத் தூண்டிவிட முயற்சிக்குமே தவிர, தீர்த்து வைக்க முயற்சிக்காது.

கடந்தகால அனுபவங்களூடாக நாங்கள் புரிந்துவைத்துள்ள உண்மையே இது. ஓட்டமாவடிப் பிரதேசசபையை எமது கட்சியே வென்றிருந்தது. எனினும் எங்களை ஆட்சியமைக்கவிடாமல், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் கூட்டுச்சேர்ந்து ஆட்சியமைத்துள்ளன. இந்த விடயத்தில் ஏற்பட்ட புரிந்துணர்வு போன்று ஏனைய காணிப் பிரச்சினை மற்றும் கல்விப்பிரச்சினைகளில் ஏன் இவர்களால் ஒன்றுபடமுடியாது?

கல்முனை வடக்குப் பிரதேச செயலக விடயத்தையும் இழுத்தடிக்க வேண்டியதில்லை. சமூகத் தலை மைகள் இணைந்தால் இதையும் இலகுவாகத் தீர்க்கலாம் - என்றார். (எ-இ)

## ‘சின்னஞ்சிறு கிளியே’ இறுவட்டு வெளியீடு



சித்ரஷேய்திராக் கலைக்கூடத்தின் ‘சின்னஞ்சிறு கிளியே’ சிறுவர் பாடல் இறுவட்டு வெளியீட்டு விழா ஊடகவியலாளர் இளங்கீரன் தலைமையில் கடந்த மாதம் 27ஆம் திகதி யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை நாச்சிமார் கோவில் காமாட்சி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

லயஞானி நல்லை க.கண்ணதாஸின் கவி வரிகளில் இசையமைப்பாளர் தேனிசையாளன் ஸ்ரீ குகனின் இசையில் அமைந்த பத்துப்பாடல் களின் தொகுப்பாக குறித்த இறுவட்டு வெளியாகியுள்ளது. இறுவட்டில் இடம்பெற்ற பாடல்களை சித்ரஷேய் திராக் கலைக்கூடத்தின் இயக்குநரும் பண்ணிசைக் கலைஞருமான திருமதி சித்திரா ஹவிக் குமாரும் அவருடைய மாணவர்களும் பாடியிருந்தனர். இதன்போது இசையரங்கு நிகழ்வும் இடம்பெற்றது. (ச-41-100)

## மரண அறிவித்தல்



பிறப்பு 15 . 03 . 1954 — இறப்பு 08 . 08 . 2025

### அருணாசலம் படவீரசிங்கம்

**(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர் சித்த போதனாவைத்தியசாலை - கைதடி)**

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் படவீரசிங்கம் அவர்கள் நேற்று (08.08.2025) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகனும், சிவசிதம்பரம் - பூமணியின் மருமகனும், காலஞ்சென்றவர்களான புலேந்திரன், கனகம்மா, அருட்பிரகாசம், தெய்வேந்திரன் மற்றும் சிவபாக்கியம், தில்லைநாயகர், கந்தசாமி, டிமிலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வசந்தமலரின் அன்புக் கணவரும், ரஜீவ் (Advantis 3PL Plus), கஜதீபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை - கிளிநொச்சி), நிரஞ்சனா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், தென்மராட்சி), கிரிபிரசாத் ஆகியோரின் தந்தையும், லக்ஷாயினி (தாதிய உத்தியோகத்தர் - யாழ் போதனா வைத்திய சாலை), அர்ச்சனா (சட்டத்தரணி - மாவட்ட நீதிமன்றம் - கிளிநொச்சி), மோகனடாஸ் ஆகியோரின் மாமனாரும், வசந்தகோகிலத்தின் மைத்துனரும், பவிசனா, ரிஷிகா, அக்ஷிகா, விஜசகி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10-08-2025) ஞாயிற்றுக்கிழமை இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 02:00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**

**077 445 5902** (CS/3801) J-1 **குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 07 . 1933 — மறைவு 07 . 08 . 2025

### தம்பு கந்தவனம்

**(உரிமையாளர் -தம்பு ஸ்ரோர்ஸ், காளுவன் சந்தி, சுழிபுரம்)**

சுழிபுரம் மத்தி, கல்லை வேம்படியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தம்பு கந்தவனம் அவர்கள் கடந்த (07.08.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - அன்னமுத்து தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும், இந்திரா (ஜேர்மனி), கனகேந்திரன் (நம்பி - தம்பு ஸ்ரோர்ஸ்), கலாவதி (வதனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காங்கேயன் (மோகன் - ஜேர்மனி), வசந்தாதேவி (ஆசிரியை - யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்), தயாளன் (நல்லூர் பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அரங்கேயன், சரங்கேயன் (ஜேர்மனி), கணநாதன் (UK/ லண்டன்), சுபகா (யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்), கருணிகா (வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி), விசாலி (பல்கலைக் கழகம்) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான விஸ்வநாதர், மகேஸ்வரி மற்றும் அருணாச்சலம், தங்கமுத்து, முருகேசப்பிள்ளை, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.08.2025) ஞயிற்றுக்கிழமை முற்பகல் 10:00 மணியளவில் அவரது கல்லைவேம்படி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**

**கந்தவனம், கனகேந்திரன்,**
**நம்பி - 077 923 3117,**
**மருமகன் தயாளன் - 076 773 1348**
**மோகன் - 0049 178 312 5212**

**கல்லை வேம்படி,**
**சுழிபுரம்.**

## மரண அறிவித்தல்



மலர்வு 23 . 04 . 1971 — உதிர்வு 08 . 08 . 2025

### திருச் செல்வம் பிறேமிளா

யாழ் ஏழாலையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் - பிறேமிளா அவர்கள் நேற்று (08.08.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - இந்திராதேவி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன் - அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகளும், திருச்செல்வம் அவர்களின் அன்பு மனைவியும், ஜான்ஸி (கொலண்ட்), யதுஷன் ஆகியோரின் அன்பு தாயாரும், சஞ்சீவன் (கொலண்ட்) அவர்களின் அன்பு மாமியாரும், சுஜீவ், சஜீவ், சொபினா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், கெங்காதரன், காலஞ்சென்றவர்களான, ஜமுனா, கேதீஸ்வரன் மற்றும் தர்சினி (லண்டன்), மயூறா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் (லண்டன்), அருட்செல்வம், காலஞ்சென்ற பஞ்சலிங்கம், ஸ்ரீதரன், கிருபாகரன் (பிரான்ஸ்), அனுஷா (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.08.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**

**பரமேஸ்வரா பாடசாலை வீதி,**
**திருநெல்வேலி.**

**குடும்பத்தினர்**
**077 639 2910**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி லோகநாயகி இரத்தினசிங்கம்

அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகநாயகி இரத்தினசிங்கம் (ஓய்வுபெற்ற நூலகர்) நேற்று (08.08.2025) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற Dr.V.K. கனகசிங்கம் -கமலாசினி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற அப்பாத்துரை -கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அப்பாத்துரை இரத்தினசிங்கம் (சாலைப் பரிசோதகர் CTB) அவர்களின் அன்பு மனைவியும், கௌசிகா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்-பிரதிப் பிரதம செயலாளர் நிர்வாகம் அலுவலகம்), துஷீந்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும், கருணநாயகி, கமலநாயகி, பரமானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், விமலராசா, பஸ்தியாம்பிள்ளை, இந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனியும், பாயுஸ்திரியாவின் அன்பு மாமியாரும், தரணீசனின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 09, புறூடி முன் ஒழுங்கை, அரியாலை எனும் முனவரியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தனக்கிரியைகளுக் காக நாளை (10.08.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே: 021 221 1198

(CS 38041) A

# மூளாய் மருத்துவமனையில் மகப்பேற்றுச் சேவை ஆரம்பம்

யாழ்., ஓக. 9

மூளாய் கூட்டுறவுச் சங்க மருத்துவமனையின் மகப்பேற்றுச் சேவைகள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

1995 ஆம் ஆண்டில் மூளாய், பொன்னாலை நோக்கி முன்னேறும் படை நடவடிக்கையின் போது ஏற்பட்ட இடப் பெயர்வினால் குறித்த மருத்துவமனையின் செயற்பாடுகள் முடங்கிப்போயிருந்தன.

தற்போது மருத்துவமனையின் பணிப்பாளர் சபையினால் ஜப்பான் தூதரகத்திடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகக் கிடைக்கப்பெற்ற நிதியில் மகப்பேற்றுப்பகுதி புனரமைக்கப்பட்டு, உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு மீண்டும் ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

(ச-25)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 ❖ 07 ❖ 1965 | 07 ❖ 08 ❖ 2025 |



## Dr.விக்னேஸ்வரன் நல்லைநாதன்

இளைப்பாறிய வைத்தியர்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கொழும்பு 03 ஐ வதிவிடமாகவும் கொண்ட இளைப்பாறிய வைத்தியர் Dr.விக்னேஸ்வரன் நல்லைநாதன் அவர்கள் கடந்த (07.08.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லை - ஈஸ்வரி விக்னேஸ்வரன் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வரத்தினம் தியாகராஜன் அவர்களின் மருமகனும், Dr.அருள்செல்வி அவர்களின் அன்புக் கணவரும், Dr.செந்தூரன் அவர்களின் அன்புத்தந்தையும், மஞ்சுளா அவர்களின் பாசமிகு அண்ணாவும், Dr.சுதர்சன், சாந்தினி, ரஞ்சனி, சிற்பவானந்தன், சிவகுமார் கலைச்செல்வி ஆகியோரின் மைத்துனரும், அபிராமி, அஞ்சனா ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (09.08.2025) சனிக்கிழமை முற்பகல் 9.00 - பிற்பகல் 6.00 வரை வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (10.08.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பொரளை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## பத்மநாதன் கோபிதாஸ்

பொற்தொழிலாளர் வீதி, சங்கத்தானை சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் கோபிதாஸ் கடந்த 07.08.2025 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் (சோதி பத்தர்) மற்றும் கமலாம்பிகை தம்பதிகளின் மூத்த புதல்வனும், ரவிதாசன் (அவுஸ்ரேலியா), சிவாஜினி, டயாநந்தி ஆகியோரின் அன்பு சகோதரனும், வனஜா (அவுஸ்ரேலியா), தயாபரன், குகதாசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஸ்ரீகிருஸ்ணா (அவுஸ்ரேலியா), கவின்ரா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு பெரியப்பாவும், அபிரதன், லஸ்வின், சாய்பல்லவி ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற குமாரசாமி இராசமணி மற்றும் வல்லிபுரம் கனகம்மா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 10.08.2025 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கண்ணாடிபிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 29.10.1979 | 07.08.2025 |

பொற்தொழிலாளர் வீதி
சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு
075 510 5582, 077 853 4183
077 114 4250

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறை உணர்ந்து இந்தியா இனியாவது உதவவேண்டும்

## கஜேந்திரன் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், ஓக.9**
**இந்தியா கடந்த காலங்களில் ஈழத் தமிழ் மக்களுக்குப் பெரும் வரலாற்றுத் தவறை இழைத்துள்ளது. இனியாவது இந்தியா அந்தத் தவறை உணர்ந்து தமிழர்களின் தேசம், இறைமை அங்கீகரிக்கப்பட்ட வகையிலான சுயாட்சித் தீர்வை எட்டுவதற்கு உதவ வேண்டும் என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் வலியுறுத்தியுள்ளார். வல்வைப் படுகொலையின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை வல்வெட்டித்துறையில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக மேன்முறையீட்டுநீதிமன்றமும், உயர் நீதிமன்றமும், அதிகாரங்கள் மத்திக்குத்தான் உள்ளன, மாகாணத்துக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று 31 தீர்ப்புகள் ஊடாகக்கூறியுள்ளன. இதையெல்லாம் அறிந்த யாழ். பல்கலைக்கழகச் சட்டத் துறைத் தலைவர் வெறும் அரசியல் இலாபத்துக்காக அல்லது அரசாங்கத்தை மகிழ்ச்சிப்படுத்தித் தங்கள் எதிர்பார்ப்பைத் தக்கவைக்க வேண்டும் என்பதற்காக ஒற்றையாட்சிக்கு உட்பட்ட தீர்வுத் திட்டத்துக்கு ஆதரவாகப் பொய்யான கருத்துருவாக்கத்தில் ஈடுபடுவது மிகவும் கவலை தரும் விடயம். ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்தவகையான தீர்வும் தமிழ் மக்களுக்கு விடிவைத் தந்து விடப்போவதில்லை. இவ்வாறான தீர்வுத் திணிப்பு முயற்சிகளைத் தமிழ் மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும் - என்றார். (எ-66-27)

# ஆடியபாதம் வீதியூடாக பகலில் டிப்பர்களுக்குத் தடை

## நல்லூர்ப் பிரதேசசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓக.9
வீதிப்போக்குவரத்தை இலகுபடுத்தும் நோக்குடன் ஆடியபாதம் வீதியூடாகப் பாரவூர்திகள் செல்வதனை ஒழுங்குபடுத்தி நல்லூர்ப் பிரதேசசபையால் அறிவித்தலொன்று விடுக்கப்பட்டுள்ளது.
முன்பள்ளிச் சிறார்கள், பாடசாலை மாணவர்கள் செல்லும் நேரங்கள், உத்தியோகத்தர்கள் பணிக்குச் செல்லும் நேரங்கள் மற்றும் அண்மையில் ஏற்பட்ட வீதி விபத்துகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.
அதன்படி குறித்த வீதியூடாக மண் ஏற்றிச் செல்லும் டிப்பர் வாகனங்கள் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை ஆடியபாதம் வீதியூடாகப் பயணிப்பதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
ஏனைய பாரவூர்திகள் காலை 7 மணி தொடக்கம் காலை 9 மணி வரையும், நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரையும் கல்வியங்காட்டுச் சந்தியிலிருந்து கொக்குவில் சந்தி வரையான ஆடியபாதம் வீதியூடாகப் பயணிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.
இந்த நடைமுறை எதிர்வரும் முதலாம் ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.
எதிர்வரும் காலங்களில் குறித்த செயற்றிட்டம் ஏனைய வீதிகளிலும் நடைமுறைப்படுத்தப்படுமென நல்லூர்ப் பிரதேசசபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன் தெரிவித்தார். (ச-66,20)



அச்சுவேலி உழவிக்குளம் விநாயகர் ஆலயத்துக்குப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சப்பறத்தின் வெள்ளோட்டம் கடந்த வியாழக்கிழமை அடியவர்கள் சூழ சிறப்புற நடைபெற்றது. (ச-17)




# பொதுப்போக்குவரத்துக்கு முறைப்பாட்டு இலக்கம்

யாழ்ப்பாணம், ஓக.9
பொதுப் போக்குவரத்தில் பொதுமக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் மற்றும் இடர்பாடுகளை முறையிடுவதற்கான இலக்கம் வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் அறிமுகம் செய்யப்பட்டது.
குறுந்தகவல் அனுப்பக்கூடிய 0719090900 எனும் தொலைபேசி இலக்கம் மற்றும் 021 228 5120 எனும் நிலையான தொலைபேசி இலக்கங்களை உள்ளடக்கிய விழிப்புணர்வு ஸ்டிக்கரினை பேருந்துகளில் ஒட்டும் நிகழ்வு மேலதிக மாவட்டச் செயலர் கே. சிவகரன் தலைமையில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டது. நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரன், திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் மற்றும் உதவி மாவட்டச் செயலாளர் உ.தர்சினி ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,27, 66,9)

# யாழ்.மீனவர்கள் தமிழகத்தில் கைது

சென்னை, ஓக.9
இந்தியக் கடற்பரப்பிற்குள் பிரவேசித்த வடமராட்சியைச் சேர்ந்த சகோதரர்களான இரு இளைஞர்கள் காரைக்கால் கடற்கரையில் வைத்து படகுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
இந்தக் கைது தமிழகப் பொலிஸாரால் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. இருவரிடமும் விசாரணை நடத்தப்பட்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வெளிநாட்டவர் சட்டப்பிரிவின்கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ச-100)



# 15முதல் 17 வரை புத்தகத் திருவிழா

யாழ்ப்பாணம், ஓக.9
யாழ். வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் ஏற்பாட்டில் 'யாழ்ப்பாண சர்வதே புத்தகத் திருவிழா - 2025', எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை யாழ். திருவள்ளுவர் கலாசார மையத்தின் கண்காட்சிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் நடத்தப்படவுள்ளது.
இது தொடர்பான ஊடக சந்திப்பு இல 63 நல்லூர் வீதியில் அமைந்துள்ள யாழ். வர்த்தகத் தொழிற்றுறை மன்றத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-25)



# மாற்றுத்திறனாளிகளின் திறமைகள் கிளிநொச்சி மாவட்டம் மூன்றாமிடம்

கொழும்பு, ஓக.9
மாற்றுத்திறனாளிகளின் அழகியல் திறமைகளைத் தேசிய மட்டத்துக்குக் கொண்டுசெல்வதற்காக சமூக சேவைகள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட "சித் ரூ 2025" நிகழ்வில் குழு நடனத்தில் கிளிநொச்சி மாவட்டம் தேசியமட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.
இந்த நிகழ்வானது கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பங்கேற்புடன் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
வடக்கு மாகாண ரீதியிலான போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட கிளிநொச்சி மாவட்டம் தேசியமட்டத்தில் பங்குபற்றி மூன்றாமிடத்தைப் பெற்று பெருமை சேர்த்துள்ளது. (ச-25,113)

# திருட முயன்றவர் மடக்கிப் பிடிப்பு!

மன்னார், ஓக.9
வீட்டின் ஓடு பிரித்துத் திருட முயன்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் மன்னார் நானாட்டானில் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் கடந்தவாரம் நடந்துள்ளது. வீடொன்றின் ஓட்டைப் பிரித்துத் திருட முயன்றபோது அந்தப் பகுதி இளைஞர்களால் அந்த நபர் மடக்கிப்பிடிக்கப்பட்டார் என்று கூறப்படுகின்றது.
பொதுமக்களால் பிடிக்கப்பட்ட நபர் புத்தளம், சிலாவத்தையைச் சேர்ந்தவர் என்றும், அந்தநபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவ...

முத்தையன்கட்டு குளப்பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம் தற்போது அகற்றப்பட்டு வருகின்றது. முகாமில் இருந்து அப்புறப்படுத்தப்படும் தகரங்களைத் தருவதாகக் கூறி நான்கு பேர் இராணுவத்தினர் அழைத்துள்ளனர். இதன்பின்னர் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு கைகலப்பு இடம்பெற்றதாகச் சொல்லப்படுகின்றது.

முகாமுக்குள் சென்ற மூவர் திரும்பிவந்துள்ள நிலையில், ஒருவரை கடந்த 24 மணிநேரமாக (நேற்று இரவுவரை) காணவில்லை. இதையடுத்தே, அவருக்கு என்ன நடந்தது என்று அறிவதற்காக பொதுமக்கள் இராணுவத்துடன் இரவிரவாக முரண்பட்டுவருகின்றனர்.

முத்தையன்கட்டு குளப்பகுதியிலும் தேடுதல்கள் இடம்பெற்றுள்ளன. எனினும், அவர் மீட்கப்படவில்லை. இதனால் முத்தையன்கட்டுப் பகுதியில் பெரும் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் பொலிஸாரிடமும் முறையிடப்பட்டுள்ளது என்று இராணுவ முகாமுக்கு முன்பாக குழப்பத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

முத்தையன்கட்டு குளத்தில் இன்று விரிவான தேடுதல்களை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## ஜனாதிபதியின்...

கட்சியின் முக்கியஸ்தரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சமன் ரத்னப்பிரிய இது தொடர்பில் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி அநுர நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது, அரசாங்கத்துக்கு எதிராகச் சதித்திட்டங்கள் இடம்பெறுகின்றன என்று கூறியிருந்தார். கொழும்பில் மீட்கப்பட்ட துப்பாக்கியும், வவுனியாவில் மீட்கப்பட்ட கைக்குண்டுகளும் இந்தச் சதியுடன் தொடர்புடையவை என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிராகச் சதி இடம்பெறுகின்றது என்றால், அந்தச் சதி எத்தகையது என்ற தெளிவுபடுத்தலை ஜனாதிபதி அநுர வழங்கவேண்டும். அதை தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம் மக்களுக்கு உள்ளது. அதைவிடுத்து, அரசாங்கத்துக்கு எதிராகச் சதிகள் இடம்பெறுகின்றன. எதிர்க்கட்சிகள் மிக மோசமாகச் செயற்படுகின்றன என்று கூறுவது அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளாகவே அமையும்.

அரசாங்கத்துக்கு எதிரான சதித்திட்டம் சிலவேளைகளில் அரசாங்கத்துக்குள்ளேயே இருக்கலாம். அதனால் ஏற்பட்ட அச்சம் காரணமாகவே, ஜனாதிபதி அநுர நாடாளுமன்றத்துக்கு வந்து உரையாற்றியுள்ளார் - என்றார். (அ-ம-இ)

## சைவ...

தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டத்தின்போது, பேரவையால் வழங்கப்பட்ட ஒப்புதலுக்கமைய கலாநிதி செல்வமனோகரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சைவசித்தாந்தத் துறையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் மூன்று வருடங்களுக்குச் செயற்படும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த செல்வமனோகரன் மரபு இலக்கியத்திலும், நவீன இலக்கியத்திலும் மிகுந்த ஈடுபாடு உடையவர். அத்துடன், நூல்கள் பலவற்றையும் எழுதி வெளியிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## சட்டவிரோத...

தன்றும் தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் பொதுமக்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த மாதத்துக்கான போராட்டம் நேற்று முன்தினம் மாலை ஆரம்பித்திருந்த நிலையிலேயே, நேற்றும் போராட்டம் தொடர்ந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணியும், அதைச் சுற்றியுள்ள காணிகளும் பொதுமக்களிடம் விரைவில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள். (அ-ம-66-26-20)

## ஆணொருவரின்...

புல்லுக்குளத்தில் இருந்து ஆணொருவர் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குளத்தின் நடுப்பகுதியில் சடலமொன்று மிதப்பது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், படகில் சென்று சடலத்தை மீட்டனர். உயிரிழந்தவரின் பெயர் விவரங்கள் நேற்று இரவு வரை தெரியவராத நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-17-26-66-20)

## மலேரியா...

இருவர், ஆபிரிக்க நாடொன்றுக்குச் சென்ற நிலையில் மலேரியாத் தொற்றுக்கு உட்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் அண்மையில் யாழ்ப்பாணம் திரும்பிய நிலையில், தற்போது போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஒருவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளார். இவ்வாறான பின்னணியிலேயே, இந்த ஊடக அறிக்கையை மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

எமது நாட்டில் மலேரியாவின் பரவல் முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மலேரியா இல்லாத நாடு என்ற அந்தஸ்தை கடந்த 2016ஆம் ஆண்டில் உலக சுகாதார ஸ்தாபனத்திடம் இருந்து பெற்றுள்ளோம். ஆனால், மலேரியாவைப் பரப்புகின்ற நுளம்புகள் இன்னமும் காணப்படுகின்றன. எனவே இந்த விடயத்தில் நாங்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும்.

தொற்றுக்கு உள்ளான நோயாளர்களிடம் இருந்து அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு மலேரியா பரவாதிருக்க அவர்களது வதிவிடங்களைச் சுற்றி நுளம்புகளுக்கான பூச்சியியல் ஆய்வும், நுளம்புகளை அழிக்கும் புகையூட்டல் நடவடிக்கைகளும் நுளம்பு கொல்லி மருந்துகளை விசிறும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மலேரியா உள்ள நாடுகளுக்கு மக்கள் செல்லும்போது அதற்குரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். யாழ்ப்பாணம் - பண்ணைப் பகுதியில் மலேரியாத் தடுப்பு பணிமனை செயற்படுகின்றது. அந்தப் பணிமனையுடன் தொடர்புகொண்டு உரிய மருந்துகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். இந்த நடைமுறையைப் பின்பற்றுவதன் மூலம் தேவையற்ற அசம்பாவிதங்களைத் தவிர்த்துக்கொள்ளமுடியும்- என்றுள்ளது. (அ-ம-26-20-66)

## காய்ச்சல்...

துள்ளார். அச்சுவேலி - நாவற்காடு பகுதியைச் சேர்ந்த, சந்திரானந்தன் வர்ணயா (வயது-16) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த மாதம் 5ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்ட நிலையில், தொடர்ந்து சிகிச்சைக்கு உட்பட்டு வந்துள்ளார். இந்த நிலையில் சிகிச்சையின்போது நேற்று இரவு உயிரிழந்துள்ளார்.

வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ம-26)

## இலங்கைக்...

கடற்பகுதியில் தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாக அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுவருகின்றனர். அவ்வாறு அத்துமீறிய மீனவர்கள் பலர் சமீப நாள்களாகக் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மீனவர்களைவிடுவிக்குமாறும், ஸ்ரீலங்கா கடற்படையின் கைது நடவடிக்கைகளைத் தடுத்துநிறுத்துமாறும் வலியுறுத்தியே பாம்பனில் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

அத்துடன், மீனவர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட மீன்பிடி சாதனங்கள் மற்றும் படகுகளை விடுவிக்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கச்சதீவை, உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## சிறுமி...

பட்டுள்ளார். 12 வயதுச் சிறுமியொருவர் வழங்கிய தகவல்களுக்கு அமைய, கிராம அலுவலரால் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையிலேயே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். அவர் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவரை எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-316)

## அதிவேகம்...

அச்சுவேலி - புத்தூர் சந்திக்கு அண்மையில் நேற்றுமுன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஆவரங்கால் மேற்கு புத்தூர் பகுதியைச் சேர்ந்த, ய.அஜய் (வயது-20) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார். விபத்துக்குள்ளான மோட்டார்சைக்கிளில் இருவர் பயணித்த நிலையில், மோட்டார்சைக்கிளைச் செலுத்தியவரே உயிரிழந்துள்ளார். அவர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றைய இளைஞர் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றார். வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ம-26)

## நூற்றுக்கு...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

கட்டைக்காட்டு இராணுவ முகாமுக்குப் பின்பகுதியில் உள்ள பனைகள் நேற்று முன்தினம் மாலை திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளன. இதை அவதானித்த இராணுவத்தினர் விரைவாக தீயணைப்புப் பணிகளை மேற்கொண்டனர். தீ கட்டுக்குள் அடங்காமல் பரவியதைத் தொடர்ந்து, மருதங்கேணி இராணுவமுகாமில் இருந்தும் கூடுதலான இராணுவத்தினர் தீயணைப்புப் பணிகளுக்காக அழைக்கப்பட்டனர்.

பனங்கூடலுக்குள் தீ பரவியதால், குறுகிய நேரத்தில் நூற்றுக்கணக்கான பனைகள் எரிந்தழிந்துள்ளன. நீண்ட முயற்சியின் பின்னர் தீ ஒருவாறாகக் கட்டுப்படுத்தப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-27)

## கடலுக்குச்...

சேர்ந்த ஜெயராஜ் சுபராஜ் (வயது-21) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

கொக்குத்தொடுவாய் களப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு மீன்பிடிக்கச் சென்ற இளைஞரே, நேற்று அதிகாலை இவ்வாறு வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

கடற்றொழிலுக்காகச் சென்ற மீனவரொருவர், வழியில் ஒருவர் வீழ்ந்து கிடப்பதை அவதானித்துள்ளார். யானை அடித்துக் கொன்றிருக்கலாம் என்று சந்தேகித்த அவர், கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவருக்கு தகவல் வழங்கியுள்ளார். பின்னர், அவர்கள் சடலத்தைப் பரிசோதித்தபோதே அவர் வெட்டிக் கொல்லப்பட்டமை தெரியவந்துள்ளது.

அதன் பின்னர் கொக்குளாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதும், சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மோப்ப நாய் சகிதம் தேடுதல்களை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் சடலத்தைப் பார்வையிட்டார். முறையான விசாரணைகளின் பின்னர், உடற்கூற்றுப்பரிசோதனையை முன்னெடுக்குமாறும், அதன் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் அவர் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (அ-ம-35)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீன்பிடிக்கலங்களின் கணக்கெடுப்பு வாரத்தை முன்னிட்டு பூநகரி கடற்றொழில் பரிசோதகர் மகேந்திரநாதன் நக்கீரன் தலைமையில் கிளிநொச்சி பள்ளிக்குடா இறங்குதுறையில் மீன்பிடிக்கலங்கள் கடந்த புதன்கிழமை கணக்கெடுக்கப்பட்டன. (ச-25,113)

# ஆங்கில கற்பித்தல் துறை முதலாவது ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம், ஓக.9

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் புதிய துறையாக உருவாகியிருக்கும் ஆங்கில மொழி கற்பித்தல் துறை, தனது முதலாவது சர்வதேச ஆய்வு மாநாட்டை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நாளைமறுதினம் திங்கட்கிழமை முதல் 13 ஆம் திகதி வரை நடத்தவுள்ளது. துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசw; குணராஜா, கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் மற்றும் ஆங்கில மொழி கற்பித்தல் துறைத் தலைவர் கலாநிதி கி. சண்முகநாதன் ஆகியோரின் இணைத் தலைமையில் யாழ். பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவின் முன்னாள் தலைவரும், பென்சில்வேனியா பல்கலைக்கழகப் பேராசிரியராக பணியாற்றுபவருமான கலாநிதி சுரேஸ் கனகராஜாவின் வழிகாட்டலில் "ஆங்கிலத்தின் காலனிய நீக்கம்' பற்றியதான கருப்பொருளில் மாநாடு நடைபெறவுள்ளது.

அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகம், நியூஸ்லாந்து ஒக்லாண்ட் பல்கலைக்கழகம், லண்டன் பல்கலைக்கழகம், ஹொங்கொங் பல்கலைக்கழகம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் மாநாட்டில் ஆதார சுருதி உரைகளையும் பேருரைகளையும் ஆற்றவுள்ளனர். மாநாட்டில் மொத்தம் 96 ஆய்வுக்கட்டுரைகள் பல்வேறு நாட்டு ஆய்வாளர்களாலும் சமர்ப்பிக்கப் படவுள்ளன. ஆங்கிலத்துறை சார்ந்த ஆர்வலர்கள், ஆசிரியர்கள், மாணவர்களை மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு மாநாட்டின் இணைப்பாளர் பேராசிரியர் கந்தையா சிறிகணேசன் அழைப்பு விடுத்துள்ளார். (ச-25,20)

# மோசடி வழக்குகளின் தரவுகள் ஏதும் இல்லை

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள ஊழல் மோசடிகள் மற்றும் படுகொலைகள் தொடர்பில் அரசியல்வாதிகள், அரச அலுவலர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் 2022-2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை தொடர்பான தரவுகள் இல்லாத காரணத்தால் வினவப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாது என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹுமான், 2015ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள ஊழல் மோசடிகள் மற்றும் படுகொலைகள் தொடர்பில் அரசியல்வாதிகள் அரச அலுவலர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் 2022 - 2024 காலப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை என்ன? அவற்றில் இன்றளவில் நிறைவடைந்துள்ள வழக்கு விசாரணைகளின் எண்ணிக்கை என்ன? அந்த வழக்குகள் யாவை, வழக்குகளில் சட்டத்துறைத் தலைமையதிபதியால் மீளப்பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, முன்வைக்கப்பட்ட இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கமுடியாது. 2015ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள ஊழல் மோசடிகள் மற்றும் படுகொலைகள் தொடர்பில் அரசியல்வாதிகள், அரச அலுவலர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் 2022- 2024 காலப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை தொடர்பில் எவ்விதத் தரவுகளும் கிடையாது. சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழக்குத் தாக்கல் செய்யப்படும்போது அரசியல்வாதிகள், அரச அலுவலர்கள் என்று வகைப்படுத்தப்படுவதில்லை. அது தவறானது. பொதுவான நிரல்படுத்தலே குற்றங்களை அடிப்படையாகக்கொண்டு வகைப்படுத்தப்படுகிறது- என்றார். (ஏ-இ)

காணி விற்பனைக்குண்டு
மானிப்பாய் வீதி. ஓட்டுமடம் சந்திப் பகுதியில் இருந்து செழியன் வீதியினூடாக வருகின்ற இடத்தில் நெற்பரப்பு 15 விஸ்தீரணம் உடைய காணி விற்பனைக்கு உண்டு. தேவைக்கேற்ப பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 352 5157 076 763 3482

மர தளபாட உற்பத்தியாளர்களுக்கு
சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட தச்சுவேலை மெசின் (Wood working Machine) "Lida" ஒறிஜினல் 12" மற்றும் 10" Sliding இணைப்புடன் இப்பொழுது எம்மிடம். இதை ஒத்த போலிகள் தரம் குறைந்த மோட்டாருடன் சந்தையில் ஏமாந்துவிடாதீர்.



"நாங்கள் உங்களோடு"
ஆர்க் .என். கம்பனி
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020
Hotline: 071 535 7799 / 071 535 7803

உடனடி வேலைவாய்ப்பு
வடமராட்சியில் நன்மதிப்பை பெற்ற பிரபல்யமான, பல கிளைகளைக் கொண்ட வெதுப்பக உற்பத்தி நிறுவனத்திற்கு கீழ் காணும் வேலைவாய்ப்பிற்கான வெற்றிடம் காணப்படுகின்றது.
● கிளை முகாமையாளர் (Branch Manager) - 2
மேற்குறிப்பிட்ட வேலைக்கு அனுபவம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
(குறிப்பு: இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.)
தொடர்புகளுக்கு: 077 269 0764

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 16 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு
நிலப்பரப்பு
- பிரதான இராச பாதை வீதியில் இருந்து 2 வது காணி 50m தூரத்தில் உள்ளது.
- 20 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்.
- இக் காணியில் இருந்து திருநெல்வேலி, பிரதான சந்தை, கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 km தூரம்.
- நல்லூர் ஆலயம் 2 km தூரம்.
- ஒரு பரப்பின் விலை 69 இலட்சம்.
பார்வையிடும் நேரம்
காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை
தொடர்புகளுக்கு - ஜெயம்
077 814 7389
077 986 5457
(CS/3800) J-1

மணமகள் தேவை
யாழ். சைவ 1991 இல் பிறந்த, (V) குலத்தைச் சேர்ந்த, இலங்கையில் பிரபலமான நிறுவனத்தில் தொழில்நுட்பவியலாளராக பணியாற்றும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. (உள்நாடு அல்லது வெளிநாடு)
தொடர்பு:- 072 033 9015
(CS/59052) J-1

வீடு வாடகைக்கு
ஸ்ரான்லி வீதியில் ஆரியகுள சந்திக்கும் இராசாவின் தோட்ட சந்திக்குமிடையில் நிறுவனங்கள் அல்லது வணிக நோக்கங்களுக்கு பொருத்தமான ஒரே காணியில் அமைந்த இரண்டு வீடுகள் வாடகைக்கு.
தொடர்புகளுக்கு:
077 900 4515, 071 982 9666

தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு
பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.
தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526
(CS/58593) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org